அ.வ.எண்: 50/2016 நாள்: 10.03.2026

வா.சா.2 – ரேனுகா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1 ,3,4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வாதி லட்சுமி அம்மாள் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால், எனக்கு உறவுக்காரர் அல்ல ஒரே ஊரைச் சேர்ந்தவர். எங்கள் ஊரில் பஞ்சாயத்து செய்வதற்கு என்னை விட மூத்த நபர்கள் பலர் உள்ளனர் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் லட்சுமி அம்மாள் அடமானத்திற்காக பணம் கொடுத்துள்ளார், அதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அடமான கடனை கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கு சம்பந்தமான அடமான பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். ஒரு அடமானம் சம்பந்தமான சொத்து அடமானம் வைத்த நபரிடம் இருக்குமா அல்லது அடமானம் பெற்றவரிடம் இருக்குமா என்பது குறித்த சட்டநிலை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வாதி லட்சுமிஅம்மாளை எவ்வாறு அழைப்பேன் என்றால் அம்மா என்று அழைப்பேன்.

2. வழக்கு சம்பந்தமான விபரங்கள் அனைத்தும் மேற்படி லட்சுமி அம்மாள் தான் கூறியது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கும் லட்சுமி அம்மாள் தான் விபரம் கூறியது என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் வாதி எனக்கு பெரியம்மா முறை என்பதால் அவர் என்னை அழைத்து வந்து சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு பற்றி விவரங்கள் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.10 15:52:49 +0530